**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்: 45/மா/2024**
**நாள்: 15.04.2025**

| | | |
|---|---|---|
| திரு. அ. ஜான்<br>திண்டுக்கல் | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>திண்டுக்கல் மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

திண்டுக்கல், திண்டுக்கல் டவுன், **19**வது வார்டு, கிழக்கு ஆரோக்கியமாதா தெரு என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அ. ஜான் என்பவரின் **23.02.2024** நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் **26.02.2024** அன்று பெறப்பட்டு 45/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

திண்டுக்கல், திண்டுக்கல் டவுன், **19**வது வார்டு, கிழக்கு ஆரோக்கியமாதா தெரு என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அ. ஜான் என்பவர் **23.02.2024** நாளிட்ட தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

"மேற்கண்ட நான் மதிப்பிற்குரிய தாங்களிடம் மிகப் பணிவுடன் முன்வைக்கும், கோரிக்கை என்னவென்றால், திண்டுக்கல் மாநகராட்சிகுட்பட்ட **19**வது வார்டு, கிழக்கு ஆரோக்கியமாதா தெருவில் உள்ள, திண்டுக்கல் மாநகராட்சி டவுன் சர்வே வார்டு **6**, பிளாக்–**43**, T.S. No.**2918**ல் கட்டப்பட்டதுமான திண்டுக்கல் மாநகராட்சி அரசு பொது கிணறு மற்றும் கிணற்றடி நிலம் உள்ளது ஆகும். மேலும் மேற்கண்ட திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான பொது கிணற்றினை சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்து, மேற்கண்ட எதிர்மனுதாரர்கள் மாடி வீடுகள் கட்டிக் கொண்டு அரஜாகமாக கட்டுமான ஆக்கிரமிப்புகள்தனை செய்துள்ளார்கள் என்றும், மேற்கண்ட எதிர் மனுதாரர்களின் ஆக்கிரமிப்புகள்தனை அகற்றுதல் நடவடிக்கை எடுத்து பொது கிணற்றினை மீட்டு தருமாறு, நான் கடந்த **2023**–ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல், மாவட்ட வருவாய் அலுவலர் (DRO), வருவாய் கோட்டாட்சியர் (RDO), வட்டாட்சியர், CM CELL அலுவலகம், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு நான் அளித்த கோரிக்கை மனுக்களின் அடிப்படையில், மேற்கண்ட மாநகராட்சி பொது கிணற்றினை வருவாய் துறை மற்றும் நிலஅளவை பிரிவு அலுவலர்கள் நேரில் ஆய்வு செய்தும், புலத் தணிக்கை செய்யப்பட்டது ஆகும். மேலும், மேற்கண்ட திண்டுக்கல் மாநகராட்சி கிணற்றினை புல தணிக்கை செய்யப்பட்டு, பொது கிணற்றினை சட்ட விரோதமாக 5 (ஐந்து) தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து மாடிவீடுகள்தனை கட்டியுள்ளதாகவும், மற்றும் மேலும் பொது கிணற்றினை ஆக்கிரமிப்பு செய்து, வீடுகள் கட்டியுள்ள எதிர்மனுதாரர்கள் வருவாய் துறையில் கடந்த **2007**–ம்

ஆண்டு சிறப்பு வீட்டுமனை திட்டத்தின் மூலமாக வீட்டுமனை பட்டாக்கள்தனை பெற்றதாக சொல்லிக் கொண்டு, சட்ட விரோதமாக சில வருவாய் துறை அலுவலர்களின் துணையோடு, வருவாய் நிலை ஆணைகள் (RSO) மற்றும் அரசு சட்ட விதிமுறைகளையும் மீறியும், தவறான வகையில் போலி பட்டாக்கள்தனை பெற்றுக் கொண்டுள்ளனர் ஆகும். மேலும் திண்டுக்கல் மாநகராட்சி கிணற்றினை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்து மாடி வீடுகள் கட்டியுள்ள எதிர்மனுதாரர்களுக்கு சொத்து வரி, வீட்டு வரி, குடிநீர் வரி உள்ளிட்ட ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளது ஆகும். மேற்கண்ட திண்டுக்கல் மாநகராட்சி நிர்வாகத்தின் பொறுப்பற்ற மெத்தனபோக்கும், மாநகராட்சி நிர்வாகத்திற்கு சொந்தமான கிணற்று நிலமானது, தனிநபர்களால் ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு துணை போகின்ற வகையிலும், தனது சொத்தினை பாதுகாக்கவும், பராமரிக்கக்கூடிய கடமையில் இருந்து தவறிய செயலாகவும் தெரிய வருகிறது ஆகும். மேலும் திண்டுக்கல் மாநகராட்சி நிர்வாகத்தின் அலட்சிய செயலானது, சட்டத்திற்கு புறம்பாகவும், தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செயலுக்கு முற்றிலும் சாதகமான விதத்தில் செயல்படுவதுடன், அரசு பொது கிணற்றினை ஆக்கிரமிப்பாளர்களுக்கு தாரை வார்க்கும் செயலில் இருக்கிறது ஆகும்.

மேலும், மேற்கண்ட திண்டுக்கல் மாநகராட்சி நிர்வாகத்தின் உடைய முறை தவறிய சட்ட விரோத செயலானது, பொது சொத்தினையும், அரசு நிலத்தினையும் அராஜகமான முறையில், அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்யும், நில அபகரிப்பு பேர்வழிகளுக்கு, உள்ள உறுதுணையாகவும், அரசு விதிமுறைகளை மீறியும், பொது மக்களுக்கு பாத்தியப்பட்ட அரசு பொது கிணற்றினை, சில விரோத ஆக்கிரமிப்பாளர்களுக்கும், தனி நபர்களுக்கும், சமூக விரோதிகளுக்கும் விலை போய் விட்டதாக கருதக்கூடிய அவலமான நிலையிலும், இழிவான மற்றும் ஊழல் மலிந்த போக்கினை காட்டக்கூடிய கொடிய செயலாக இருக்கிறது. திண்டுக்கல் மாநகராட்சி அரசு பொது கிணற்றினை கொள்ளையடித்த, சட்ட விரோத கும்பலுக்கு உற்ற துணையாக திண்டுக்கல் மாநகராட்சி நிர்வாகம் செயல்படுவதுடன், ஆக்கிரமிப்பு செய்தவர்களின் மீது அடிப்படை சட்ட நடவடிக்கைதனையும் கூட எடுக்காமல், மாநகராட்சி சொத்து ஆக்கிரமிப்பு செயலுக்கு ஆதரவு தரும் கேடு கெட்ட நிலையில் உள்ளது ஆகும். ஆகவே மதிப்பிற்குரிய தாங்கள் என்னுடைய இந்த கோரிக்கைதனை ஏற்று, மேற்கண்ட திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான அரசு பொது கிணற்றினை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்த, எதிர் மனுதாரர்களுடைய போலி பட்டா ஆவணங்களை ரத்து செய்ய தக்க நடவடிக்கை உதவிதனையும், ஆக்கிரமிப்பு செய்தவர்களின் வீட்டு வரி, சொத்து வரி, குடிநீர் வரி உள்ளிட்ட ஆவணங்களை ரத்து செய்யவும், மற்றும் பொது கிணற்று நிலத்தினை ஆக்கிரமித்து கட்டியுள்ள மாடி வீடுகள் உள்ளிட்ட கட்டிட ஆக்கிரமிப்புகளை அகற்ற தக்க நடவடிக்கைதனை எடுத்து மாநகராட்சி பொது கிணற்றினை மீட்டு தருவதற்கு உரிய நடவடிக்கைதனை எடுப்பதற்கு திண்டுக்கல் மாநகராட்சி நிர்வாகத்திற்கு தக்க உத்திரவுதனை பிறப்பித்து உதவிட மிகப் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்."

**2.** முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 29.07.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 07.10.2024 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

"திண்டுக்கல் மாநகராட்சி வார்டு 6, பிளாக் 43, நகரளவு எண்.2918ல் (3274 ச.மீ.) அரசு புறம்போக்கு நகராட்சி கிணற்றடி நிலத்தில் சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை அகற்ற கோரியும் மனுதாரர் திரு. ஏ. ஜான் அவர்களின் கடிதத்தின் அடிப்படையில் நகர திட்டமிடுநர், நகர்சார் ஆய்வாளர் ஆகியோர் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டதில் நகரப் புல எண்.2918, நகராட்சி கிணறு போக மீதமுள்ள இடத்தில்

3 மாடி வீடுகள் பரப்பளவிலும் வீடுகள் உள்ளது மற்றும் 2 ஓட்டு வீடுகள் பரப்பளவிலும் 5 வீடுகள் உள்ளது.

மேற்படி 5 வீடுகளுக்கும் 2007–ம் வருடம் H.S. 1408/1417, ந.க. எண். சி5/28047/2002–ன்படி சிறப்பு இலவச வீட்டுமனை ஒப்படை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டுமனை ஒப்படை நகர கணக்கில் மாறுதல் ஏற்படாமல் சர்க்கார் புறம்போக்கு கால்நடை மருத்துவமனை என பழைய நிலையிலேயே உள்ளது.

ஆக்கிரமிப்பினை அகற்றும் நடவடிக்கை எடுக்கும் முன் வழங்கப்பட்ட சிறப்பு வீட்டு மனை பட்டா குறித்தான உண்மைத் தன்மை குறித்தும், வழங்கப்பட்ட பட்டா வருவாய் பிரிவின் மூலம் ரத்து செய்ய இயலும் என்பதாலும், பட்டா ரத்து செய்யப்பட்டதற்கான விபரம் அளிக்குமாறும் மேலும், சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள ரத்து செய்யப்பட்ட பட்டா குறித்தான உரிய அறிக்கையினை உடன் வழங்க கோரப்பட்டது. நாளது தேதி வரை அறிக்கை அளிக்கப்படாததாலும், மேலும் நகரப்புல எண்.2917–ல் சர்க்கார் புறம்போக்கு கால்நடை மருத்துவமனை என நில அளவை ஆவணங்களில் உள்ளது. மேற்படி இடத்தில் மனுதாரர் திரு. ஏ.ஜான் மற்றும் பலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேற்படி இடத்தில் இரு தரப்பினருக்கும் இடையே கருத்து வேறுபாடு காரணங்களால் அவ்வப்போது சட்ட ஒழுங்கு பிரச்சனை வருகிறது. மேற்படி, இடமானது முழுவதும் வருவாய் துறையினருக்கு சொந்தமான அரசு புறம்போக்கு நிலம் என்பதால், மாநகராட்சியினால் ஆக்கிரமிப்பு அகற்ற வழிவகையில்லை. எனவே, ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தினை வருவாய் துறையின் வாயிலாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 26.12.2023, 21.02.2024, 22.03.2024, 13.05.2024 மற்றும் 02.07.2024 நாளிட்ட கடிதங்களில் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையிலுள்ளது.'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 13.02.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.02.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. அ. ஜான் சார்பாக திரு. M. முருகன் என்பவர் 13.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல் நகரம் வார்டு 6, பிளாக் 43, நகரமைப்பு எண்.2917, 2918ல் புலத்தணிக்கை மேற்கொண்டு அளவை பணி செய்ததில் வார்டு 6, பிளாக் 43 நகரப்புல எண்.2917ல் 0.9041.0 ஏர்ஸ் கால்நடை மருத்துவமனை என நகரக்கணக்கில் தாக்கலாகி உள்ளது. மேற்படி நகர புல எண்.2917ல் தென்புறம் கால்நடை மருத்துவமனை அமைந்துள்ளது. மேற்படி நகர புல எண்.2917ல் கால்நடை மருத்துவமனை அமைந்தது போக மீதமுள்ள இடத்தில் 2007–ம் வருடம் H.S.1408-1417 ந.க.எண்.சி5/28047/2002ன்படி சிறப்பு இலவச வீட்டுமனை ஒப்படைத்து பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டுமனை ஒப்படை நகர கணக்கில் மாறுதல் ஏற்படாமல் சர்க்கார் புறம்போக்கு கால்நடை மருத்துவமனை என பழைய நிலையிலேயே உள்ளது.

மேலும் வார்டு 6, பிளாக் 43, நகர புல எண்.2918 ஆனது சர்க்கார் புறம்போக்கு 0.0327.0 ஏர்ஸ் நகராட்சி கிணறு என நகர கணக்கில் தாக்கலாகி உள்ளது. மேற்படி நகர புல எண்.2918ல் 2007ம் வருடம் H.S.1408-1417, ந.க.எண்.சி5/28047/2002ன்படி சிறப்பு இலவச வீட்டுமனை ஒப்படை 5 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நகர புல எண்ணில் கிணறானது நீளம் 5.0 மீட்டர், அகலம் 4.0 மீட்டர் என 0.0020.0 சதுர மீட்டர், பரப்பளவு உடையது. ஆட்சேபனை இல்லாத புறம்போக்கு நிலங்களுக்கு புல எண்.2917–இல் பட்டா வழங்கியதை பயன்படுத்தி, புல எண்.2918–இல் உள்ள

முனிசிபல் கிணற்றை சுற்றியுள்ள இடங்களுக்கு உட்பிரிவு செய்து போலியாக பட்டா பெற்றுள்ளனர். எனவே, இந்த ஆக்கிரமிப்பு கட்டடங்களுக்கு மாநகராட்சியால் விதிக்கப்படும் அனைத்து வரிவிதிப்புகளையும் இரத்து செய்யவும், மேற்படி நகரப்புல எண். 2918–இல் உள்ள 327 சதுர மீட்டர் அளவு உள்ள இடத்தினை கள ஆய்வு செய்து, அவ்விடத்திலுள்ள கிணற்றினை மீட்டு பொது பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் மேலும் அங்கு போலி ஆவணங்களின் மூலம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றிட ஆவண செய்யுமாறு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்றத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. திண்டுக்கல் மாநகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் உதவியாளர் ஆகியோர் 13.02.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

"திண்டுக்கல் மாநகராட்சி வார்டு எண்.6, பிளாக் எண்.43, நகரளவு எண்.2918 (0.0327.0 ஏர்ஸ்) அரசு புறம்போக்கு நகராட்சி கிணற்றடி நிலத்தில் சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த ஆக்கிரமிப்பினை அகற்ற கோரியும் மனுதாரர் திரு. A. ஜான் அவர்கள் புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு நகர திட்டமிடுநர், நகர் சார் ஆய்வாளர் அவர்கள் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டதில் நகரப்புல எண்.2918 – TSLR ன்படி அரசு புறம்போக்கு நகராட்சி கிணறு என்று பதிவாகியுள்ளது. இந்த அரசு புறம்போக்கு நகராட்சி கிணறு பரப்பளவு 0.0327.0 ஏர்ஸ். இந்த நகராட்சி கிணற்றின் அருகில் புல எண்கள்.2918/4, 2918/6, 2918/7, 2918/5, 2918/1 உட்பிரிவு செய்யப்பட்டு நகராட்சி கிணறு போக மீதமுள்ள இடம் 3 மாடி வீடுகள் பரப்பளவிலும் வீடுகள் உள்ளது மற்றும் 2 ஓட்டு வீடுகள் பரப்பளவிலும் 5 வீடுகள் உள்ளது. 5 வீடுகளுக்கும் 2007ம் வருடம் H.S.1408-1417 ந.க.எண்.சி5/28047/2002ன்படி சிறப்பு இலவச வீட்டுமனை ஒப்படைத்து பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், பொது மக்களுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டுமனை ஒப்படை நகர கணக்கில் மாறுதல் ஏற்படாமல் சர்க்கார் புறம்போக்கு கால்நடை மருத்துவமனை என பழைய நிலையிலேயே உள்ளது.

ஆக்கிரமிப்பினை அகற்றும் நடவடிக்கை எடுக்கும் முன் வழங்கப்பட்ட சிறப்பு வீட்டு மனை பட்டா குறித்தான உண்மை தன்மை குறித்தும், வழங்கப்பட்ட பட்டா வருவாய் பிரிவின் மூலம் ரத்து செய்ய இயலும் என்பதாலும், பட்டா ரத்து செய்யப்பட்டதற்கான விபரம் அளிக்குமாறும், சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொண்டு ரத்து செய்யப்பட்ட பட்டா குறித்தான உரிய அறிக்கையினை உடன் வழங்குமாறு திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு 26.12.2023, 21.01.2024, 23.02.2024, 13.05.2024 மற்றும் 02.07.2024 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக கோரப்பட்டது. நாளது தேதி வரை அறிக்கை அளிக்கப்படவில்லை. மேலும் நகரப்புல எண்.2917–ல் சர்க்கார் புறம்போக்கு கால்நடை மருத்துவமனை என நில அளவை ஆவணங்களில் உள்ளது. மேற்படி இடத்தில் மனுதாரர் திரு. A.ஜான் மற்றும் பலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேற்படி இடத்தில் இரு தரப்பினருக்கும் இடையே கருத்து வேறுபாடு காரணங்களால் அவ்வப்போது சட்ட ஒழுங்கு பிரச்சனை வருகிறது. மேற்படி இடமானது முழுவதும் வருவாய் துறையினருக்கு சொந்தமான அரசு புறம்போக்கு நிலம் என்பதால், மாநகராட்சியினால் ஆக்கிரமிப்பு அகற்ற வழிவகையில்லை. எனவே, ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தினை வருவாய் துறையின் வாயிலாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் மூலம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்கிற விபரத்தினை ,இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

மேலும் திண்டுக்கல் மாநகராட்சியின் சொந்தமான புல எண்.2918–ல் உள்ள 0.0327.0 ஏர்ஸ் எவ்வித ஆக்கிரமிப்புகள் இல்லை என்ற விவரம் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்கள்.

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விபரங்கள் கண்டறிப்பட்டன:

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகரம், வார்டு எண் 6, பிளாக் எண்.43, நகரமைப்பு எண்.2917–ல் 0.9041.0 ஏர்ஸ் கால்நடை மருத்துவமனை என நகரக் கணக்கில் தாக்கலாகிவுள்ளதாகவும், ஆனால், மருத்துவமனை நகர புல எண்.2917–க்கு தென்புறம் அமைந்துள்ளது என்றும், கால்நடை மருத்துவமனை அமைந்துள்ள இடம் போக மீதமுள்ள இடத்தில் சிறப்பு இலவச வீட்டுமனை பொதுமக்களுக்கு வழுங்கப்பட்டுள்ளது என்றும், மேலும், வார்டு எண் 6, பிளாக் எண்.43, நகரமைப்பு எண்.2918–ல் சர்க்கார் புறம்போக்கு 0.0327.0 ஏர்ஸ் நகராட்சி கிணறு என நகர கணக்கில் தாக்கலாகிவுள்ளது என்றும், இப்புல எண்ணில் 2007ம் வருடம் 5 நபர்களுக்கு சிறப்பு இலவச வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளது என்றும், இப்புல எண்ணில் பொது கிணறு உள்ளது எனவும், ஆட்சேபனை இல்லாத புறம்போக்கு புல எண்.2917–ல் பட்டா வழங்கியதை பயன்படுத்தி நகர புல எண்.2918–ல் உள்ள பொது கிணற்றை சுற்றியுள்ள இடங்களுக்கு பட்டா பெற்று கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதால், இந்த ஆக்கிரமிப்பு கட்டிடங்களுக்கு விதிக்கப்படும் எல்லா வரிகளையும் ரத்து செய்து நகர புல எண் 2918–ல் உள்ள 327 சதுர மீட்டர் இடத்தினை கள ஆய்வு மேற்கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்றியும், பொது கிணற்றை மீட்டெடுத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் மனுதாரர் கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள திண்டுக்கல் மாநகராட்சி வார்டு எண் 6, பிளாக் எண்.43, நகரளவு எண்.2918–ஐ ஆய்வு செய்ததில் TSLR–ன்படி அரசு புறம்போக்கு நகராட்சி கிணறு என்று பதிவாகிவுள்ளது என்பதும், இதன் பரப்பளவு 0.0327.0 ஏர்ஸ் என்றும், கிணற்றின் அருகில் புல எண் 2918/4, 2918/6, 2918/7, 2918/5, 2918/1 என உட்பிரிவு செய்யப்பட்டு, நகராட்சி கிணறு போக மீதமுள்ள இடத்தை சிறப்பு இலவச வீட்டுமனை திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும், பட்டா குறித்தான உண்மைத் தன்மை தொடர்பாக திண்டுக்கல் கோட்டாட்சியர் அவர்களுக்கு விவரம் கோரப்பட்டுள்ளதும், மேலும், நகரப் புல எண் 2917–ல் சர்கார் புறம்போக்கு கால்நடை மருத்துவமனை என நில அளவை ஆவணங்களில் உள்ளது என்பதும், இந்த இடத்தில் திரு.A. ஜான் மற்றும் பலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதும், வருவாய் துறையினருக்கு சொந்தமான அரசு புறம்போக்கு நிலம் என்பதால், மாநகராட்சியினால் ஆக்கிரமிப்பினை அகற்ற வழியில்லை என்பதும், மேலும் திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான புல எண் 2918–ல் உள்ள 0.0327.0 ஏர்ஸில் எவ்வித ஆக்கிரமிப்புகளும் இல்லை என்பதும், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் உதவியாளரின் வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

8. மனுதாரர் மேற்படி புல எண் 2918–ல் உள்ள நகராட்சி கிணற்றை சுற்றியுள்ள ஆக்கிரமிப்பு கட்டிடங்களுக்கான அனைத்து வரியினை ரத்து செய்யுமாறு கோரியுள்ளதற்கு, திண்டுக்கல் மாநகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் உதவியாளர் ஆகியோர் திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான புல எண்.2918–ல் உள்ள 0.0327.0 ஏர்ஸில் எவ்வித ஆக்கிரமிப்புகளும் இல்லை என்று தெரிவித்த நிலையில், நகரப்புல எண்.2918–ல் வழங்கப்பட்ட வீட்டு மனை பட்டாவின் உண்மை தன்மை குறித்தான அறிக்கையினை வருவாய் துறையிடமிருந்து பெற்று, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியருடன் ஒன்றிணைந்து, நகரப்புல எண்.2918–ஐ முழுவதுமாக கள ஆய்வு மேற்கொண்டு, மேற்காண் புல எண்ணில் மனுதாரர் தெரிவித்துள்ளவாறு ஆக்கிரமிப்பு இருக்கும் பட்சத்தில், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (Tamil Nadu Urban Local Bodies Act 1998)-ன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.அ. ஜான்,
த/பெ.அந்தோனி,
கிழக்கு ஆரோக்கியமாதா தெரு,
19வது வார்டு, திண்டுக்கல் டவுன்,
திண்டுக்கல்.

2) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்–624 001.

3) வருவாய் கோட்டாட்சியர்,
திண்டுக்கல் (திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மூலமாக)

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

5) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

17/4/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை – 600 032